முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2021 சனவரி

## (302) முகாமைக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2021-03-21
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*
  (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) முகாமைக் கணக்கீடானது முகாமையின் தீர்மானமெடுக்கும் நோக்கத்திற்காக நிறுவனம் ஒன்றின் உள்ளகப் பயனர்கள் பிரதானமாகப் பயன்படுத்துகின்ற தகவல்கள் மற்றும் நிதி அறிக்கைகளின் தயாரிப்பினை உள்ளடக்கியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

முகாமைக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டினை (02) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட CX கம்பனியானது பொருள் CX1** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. **CX1** தொடர்பான 2021 ஏப்ரல் மாதத்திற்குரிய கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | 130 |
| அலகொன்றின் மாறும் கிரயம் | 98 |
| மாதாந்த நிலையான மேந்தலை | 94,720 |

மாதம் ஒன்றிற்கான பாதிடப்பட்ட விற்பனைக் கணியம் 3,800 அலகுகள் ஆகும்.

**நீங்ள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) சமப்பாட்டுப் புள்ளி (BEP) – அலகுகளில்

(ii) மாதத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட இலாபம் - பாதிடப்பட்ட விற்பனைக் கணியத்தில் (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட MKT கம்பனியானது** சிறியளவான சிறப்பங்காடிச் சங்கிலி ஒன்றை இயக்குவதுடன் அதன் பின்வரும் தகவல்கள் 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

| | **2019/20 (ரூபா)** | **2018/19 (ரூபா)** |
|---|---:|---:|
| விற்பனைகள் | 6,022,500 | 5,746,000 |
| தொக்குகள் | 944,800 | 925,200 |
| வியாபார செனமதிகள் | 891,700 | 813,300 |

2019/20 ஆம் ஆண்டிற்கான வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் மற்றும் மொத்த இலாப விகிதம் என்பன முறையே 53 நாட்கள் மற்றும் 20% ஆகும்.

எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2019/20 ஆம் ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட MKT கம்பனியின்** தொழிற்படு மூலதனச் சுழற்சிக் (working capital cycle) காலத்தைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட பெனல்ஸ் கம்பனியானது** உள்ளக சோடனைகளுக்குப் பயன்படுத்துவதற்கான அச்சுப் பலகைகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு 11,000 அலகுகளைத் தயாரித்து விற்பனை செய்ய இக்கம்பனி பாதீடு செய்திருந்தது. கோவிட் – 19 நோய்ப் பரவல் காரணமாக, கம்பனியினால் விற்பனை இலக்கை அடைய முடியாதிருந்ததுடன், 5,800 அலகுகளை மாத்திரமே அடைய முடிந்திருந்தது.

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **பாதீடு (ரூபா)** | **உண்மையானது (ரூபா)** |
|---|---:|---:|
| விற்பனைகள் | 7,150,000 | 4,200,000 |
| நேர் பொருள் | (3,256,000) | (2,368,000) |
| நேர் கூலி | (1,745,000) | (910,000) |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | (913,000) | (364,000) |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | (268,000) | (168,000) |
| நிலையான விநியோகச் செலவுகள் | (283,000) | (283,000) |
| **இலாபம்** | **685,000** | **107,000** |

ஆண்டின் தொடக்கத்திலோ அல்லது ஆண்டின் இறுதியிலோ எவ்வித தொக்குகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நெகிழ்வுப் பாதீட்டைத் (தொழிற்பாட்டுக் கூற்று) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

புதிய உற்பத்திப் பொருள் ஒன்றிற்காக வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து அலகொன்று ரூபா 400/- விலையில் 48,000 அலகுகளுக்கான விசேட கட்டளை ஒன்று **வரையறுக்கப்பட்ட எபிக் கம்பனிக்குக்** கிடைத்துள்ளது. கம்பனி தொடர்பில் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) இந்தக் கட்டளை கிடைப்பதற்கு முன்னர் ரூபா 450,000/- கிரயத்தில் ஆலோசகர் ஒருவரால் புதிய உற்பத்திப் பொருள் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(2) அலகொன்றிற்கான நேர் பொருள் கிரயம் ரூபா 210/- ஆகும். தற்போது கம்பனியால் இந்த மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதால் மூலப் பொருட்களைச் சந்தையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

(3) இருக்கின்ற ஊழியர்களைக் கொண்டு செயன்முறைப்படுத்தல் முன்னெடுக்கப்படுமாயின், அலகு ஒன்றிற்கான கூலிக் கிரயம் ரூபா 180/- ஆக அமையும். எவ்வாறாயினும், செயன்முறையை வெளித் தரப்பினர் ஒருவருக்கு வழங்குவதன் (outsourcing) மூலம் ரூபா 8,475,000/- கிரயத்தில் 48,000 அலகுகளையும் செயன்முறைப்படுத்துவதற்கான சாத்தியமும் காணப்படுகிறது.

(4) இந்தக் கட்டளை பொறுப்பேற்கப்படுமாயின், அலகிற்கான ஏனைய மாறும் மேந்தலைகளாக ரூபா 45/- செலவு செய்யப்படும்.

(5) இந்தக் கட்டளை ஏற்கப்படுமாயின், கம்பனி தற்போது மேற்கொள்ளும் பொருளின் உற்பத்தியைப் பிற்போடுதல் வேண்டும். பிற்போடப்படும் காலப்பகுதியில் தற்போது மேற்கொள்ளப்படும் பொருளின் உற்பத்தி தொடரும் பட்சத்தில் அது ரூபா 1,250,000/- நிதிசார் நன்மையைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கம்பனி இந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை **மதிப்பிடுக.** *(உமது விடைக்கு ஆதரவாக கணிப்பீடுகளைத் தருக).* (05 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட புட்ஸ் கம்பனியானது (foodz Ltd.)** அலுவலகப் பணியாளர்களின் தெரிவுக்கேற்றவாறு 8 வகையான மதிய உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. மதிய உணவைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டளைகள் (ஓடர்கள்) மாதாந்த அடிப்படையில் அல்லது நாளாந்த அடிப்படையில் செய்யப்பட முடியும். நாளாந்தக் கட்டளைகள் மாதாந்த மொத்த விற்பனையில் 20% ஆக இருக்கின்றன. இந்த நாளாந்தக் கட்டளைகள் காசு அடிப்படையிலானவை ஆகும். மாதாந்த அடிப்படையில் கட்டளைகள் செய்யப்படுமாயின், வாடிக்கையாளர்கள் 10% கழிவு (தள்ளுபடி) பெற உரித்துடையவர்களாக இருப்பதுடன் அந்த வாடிக்கையாளர்களிடமிருந்தான காசு சேகரிப்பும்கூட அடுத்துவரும் மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

மூலப் பொருட்கள் மாதாந்த அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுகின்றன. மூலப் பொருள் வழங்கலை உத்தரவாதம் செய்யும் பொருட்டு ஒரு மாதத்திற்கென மதிப்பீடு செய்யப்படும் மூலப் பொருள் கிரயத்தின் 25% இனை முற்பணக் கொடுப்பனவொன்றாக அதற்கு முந்தைய மாத முடிவில் கம்பனி செலுத்துகிறது. மீதிக் கொடுப்பனவானது கொள்வனவு செய்யப்படும் மாதத்தில் செலுத்தப்படுகிறது. மதிய உணவைப் பொதி செய்து, விநியோகிக்கின்ற செயற்பாடுகள் 60 நாட்கள் கடன் காலத்துடன் (credit period) வெளித் தரப்பினரால் கையாளப்படுகின்றன.

ஊழியர்களுக்கான சம்பளங்கள் ஒவ்வொரு மாத இறுதியிலும் செலுத்தப்படுவதுடன் சம்பளத்தின் 15% இற்குச் சமனான ஊக்கத் தொகையொன்று அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகிறது.

மாதம் ஒன்றில் நுகரப்படும் மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகின்றன. சமையலறைக் கட்டடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 50,000/- ஆகும். இவ்வாடகையானது காலாண்டு அடிப்படையில் ஒரு காலாண்டு முடிவடைந்து உடன் அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகிறது.

2021 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன் மற்றும் யூலை ஆகிய மாதங்களுக்கான தொழிற்பாட்டுப் பாதீடுகள் (operating budgets) கீழே தரப்பட்டுள்ளன:

*(ரூபா)*

| | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை |
|---|---|---|---|---|---|---|
| விற்பனைகள் | 1,800,000 | 1,900,000 | 1,200,000 | 1,800,000 | 2,000,000 | 2,100,000 |
| மூலப் பொருட்கள் | 1,080,000 | 1,140,000 | 720,000 | 1,080,000 | 1,200,000 | 1,260,000 |
| பொதியிடலும் விநியோகமும் | 252,000 | 266,000 | 168,000 | 252,000 | 280,000 | 294,000 |
| ஊழியர் சம்பளங்கள் (ஊக்கத்தொகை தவிர்ந்த) | 144,000 | 144,000 | 144,000 | 144,000 | 144,000 | 144,000 |
| மின்சாரம், நீர், தொலைபேசி | 18,000 | 18,000 | 12,000 | 18,000 | 18,000 | 18,000 |

2021 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட புட்ஸ் கம்பனியின்** காசு மீதி ரூபா 180,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 ஏப்ரல், மே மற்றும் யூன் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ஸ்பீட் கம்பனி** தானியங்கித் தொழில்துறையில் பயன்படுத்தப்படுகின்ற **SX1, SX2, SX3** என்ற மூன்று உதிரிப்பாகங்களைத் தயாரித்து விற்பனை செய்கிறது.

மூன்று உதிரிப்பாகங்களுக்குமான 2021 ஏப்ரல் மாதத்திற்குரிய கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | ரூபா (அலகு ஒன்றிற்கு) | | |
|---|---|---|---|
| | **SX1** | **SX2** | **SX3** |
| நேர் பொருள் | 2,800 | 3,400 | 3,100 |
| திறமையான கூலி – தரம் A (மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 550/- வீதம்) | 1,100 | 1,375 | 1,650 |
| திறமையான கூலி – தரம் B (மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 420/- வீதம்) | 1,680 | 1,260 | 1,470 |
| திறமையற்ற கூலி (மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 180/- வீதம்) | 1,080 | 990 | 720 |
| மாறும் மேந்தலைகள் | 2,000 | 2,000 | 1,880 |
| விற்பனை விலை | 12,400 | 14,000 | 12,900 |

| | | | |
|---|---|---|---|
| மாதம் ஒன்றிற்கு பாதிடப்பட்ட விற்பனை அலகுகள் | 1,000 | 1,500 | 800 |

2021 ஏப்ரல் மாதத்திற்காக, மனித வளப் பிரிவானது உயர்ந்தபட்சக் கூலிக் கிடைப்பனவு பற்றிக் கீழ்வருமாறு மதிப்பிட்டிருக்கிறது :

| | |
|---|---|
| திறமையான கூலி – தரம் A | 8,300 மணித்தியாலங்கள் |
| திறமையான கூலி – தரம் B | 11,000 மணித்தியாலங்கள் |
| திறமையற்ற கூலி | 20,000 மணித்தியாலங்கள் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வரையறைக் காரணி/காரணிகளை (limiting factor/s) **அடையாளங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) அடையாளங் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட வளம் / வளங்களின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் (optimal production mix) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**LST PLC** என்பது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்ட ஒரு கம்பனியாகும். அந்தக் கம்பனி பற்றிய பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) **LST PLC** ஆனது கம்பனியின் தொடக்கத்தில் பங்கொன்று ரூபா 10/- விலையில் விநியோகித்த 40 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டுள்ளது. கடந்த ஆண்டிற்காக பங்கொன்றுக்கு ரூபா 1.20 அடிப்படையில் பங்கிலாபம் செலுத்தப்பட்ட அதே வேளை, பங்கிலாபங்கள் ஆண்டொன்றிற்கு 8% வளர்ச்சி அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண வாக்குரிமைப் பங்கொன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 18/- ஆகும்.

(2) கம்பனியானது பங்கொன்று ரூபா 10/- விலையில் விநியோகித்த 6,000,000 மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளையும் கொண்டிருக்கிறது. முன்னுரிமைப் பங்குகளுக்கான வருடாந்த பங்கிலாபம் பங்கொன்றுக்கு ரூபா 1.50 ஆக உள்ளதுடன் முன்னுரிமைப் பங்கொன்றின் சந்தை விலை ரூபா 12/- ஆக உள்ளது.

(3) கம்பனியானது ஆண்டொன்றிற்கு 12% என்ற கூப்பன் (coupon) வீதமொன்றுடன் தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் 5,000,000 நிரற்படுத்தப்பட்ட தனிச்சங்களை விநியோகித்துள்ளது. தனிச்சங்கள் 3 ஆண்டுகளில் மீட்கப்படத்தக்கதாக இருப்பதுடன் தனிச்சமொன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 95/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட DRL கம்பனியானது பொருள் T** இனைத் தயாரித்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் T** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகு ஒன்றிற்கு (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள்<br>(கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 65/- வீதம் 8 கிலோகிராம்) | 520 |
| நேர் கூலி : | |
| திறமையான கூலி<br>(மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 380/- வீதம் 15 நிமிடங்கள்) | 95 |
| திறமையற்ற கூலி<br>(மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 200/- வீதம் 1 மணித்தியாலம்) | 200 |
| மாறும் மேந்தலைகள்<br>(மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 140/- வீதம் 1.25 மணித்தியாலங்கள்) | 175 |
| மொத்த மாறும் கிரயம் | 990 |
| விற்பனை விலை | 1,400 |
| **பங்களிப்பு** | **410** |

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகப் பாதிடப்பட்ட விற்பனை / உற்பத்தி 5,000 அலகுகளாக இருந்தது.

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான வருமானக் கூற்றிலிருந்து கீழ்வரும் உண்மைத் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | | |
|---|---|---|
| உண்மையான விற்பனை / உற்பத்தி | | 4,760 அலகுகள் |
| விற்பனை வருமானம் | (ரூபா) | 6,473,600 |
| நேர் கூலிக் கிரயம் : | | |
| திறமையான கூலி<br>(மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 390/- வீதம் 1,130 மணித்தியாலங்கள்) | (ரூபா) | 440,700 |
| திறமையற்ற கூலி<br>(மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 180/- வீதம் 4,950 மணித்தியாலங்கள்) | (ரூபா) | 891,000 |
| மாறும் மேந்தலைகள் | (ரூபா) | 863,360 |

மேலுள்ள காலப்பகுதிக்காகக் கீழ்வரும் முரண்கள் கணிப்பிடப்பட்டுள்ளன :

| **முரண்கள்** | **பெறுமதி** |
|---|---|
| நேர் பொருள் விலை முரண் | ரூபா 361,760/- பாதகமானது |
| நேர் பொருள் பாவனை முரண் | ரூபா 123,760/- சாதகமானது |
| கூலி வீத முரண் | ரூபா 87,700/- சாதகமானது |
| மாறும் மேந்தலை செலவின முரண் | ரூபா 12,160/- பாதகமானது |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | ரூபா 18,200/- பாதகமானது |
| விற்பனை எல்லை கனவளவு முரண் | ரூபா 98,400/- பாதகமானது |
| விற்பனை விலை முரண் | ரூபா 190,400/- பாதகமானது |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) காலாண்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட நேர் பொருட்களின் உண்மையான கிலோகிராமைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) பின்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) நேர் கூலி கலவை முரண் (04 புள்ளிகள்)

(ii) நேர் கூலி விளைவு (உற்பத்தித்திறன்) முரண் (04 புள்ளிகள்)

(c) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்காக தொழிற்பாட்டுக் கூற்று (operating statement) ஒன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

சுகாதாரப் பராமரிப்பினை வழங்கும் நிறுவனமான **வரையறுக்கப்பட்ட கெயார் கம்பனியானது** ரூபா 120 மில்லியன் கிரயத்தில் மருத்துவச் சோதனை இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வது தொடர்பான ஒரு புதிய செயற்றிட்டத்தின் சாத்தியத்தன்மை பற்றி தற்போது மதிப்பீடு செய்கிறது.

இந்த இயந்திரம் வாங்கப்பட்டால், சோதனை ஒன்றிற்கான கிரயம் நேர் பொருளுக்கு ரூபா 540/- ஆகவும் நேர் கூலிக்கு ரூபா 320/- ஆகவும் மாறும் மேந்தலைகளுக்கு ரூபா 100/- ஆகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. கம்பனியானது நோயாளர்களிடமிருந்து சோதனை ஒன்றிற்காக ரூபா 2000/- இனை அறவிட எதிர்பார்த்துள்ளது.

அடுத்த 5 ஆண்டுகள் ஈறாக, சோதனைகளுக்கான கேள்வி (demand) கீழே தரப்பட்டவாறு இருக்குமென கம்பனி எதிர்பார்க்கிறது :

| ஆண்டு | சோதனைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 50,000 |
| 2 | 50,000 |
| 3 | 54,000 |
| 4 | 56,000 |
| 5 | 38,000 |

ஆண்டொன்றிற்கான நிலையான மேந்தலைகள், 5 ஆண்டுகள் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக நேர்கோட்டு அடிப்படையின் மீது சோதனை இயந்திரத்தின் கணிப்பிடப்பட்ட தேய்மானம் உள்ளடங்கலாக ரூபா 30 மில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட கெயார் கம்பனியானது** ஆண்டொன்றிற்கு 28% இல் வருமான வரி செலுத்துவதுடன் அது அந்த ஆண்டிலேயே செலுத்தப்பட வேண்டும். கம்பனியானது புதிய இயந்திரம் மீது 25% இல் மூலதன விடுதொகை (capital allowances) கோருவதற்கு உரித்துடையதாகும்.

**வரையறுக்கப்பட்ட கெயார் கம்பனியின்** மூலதனக் கிரயம் ஆண்டொன்றிற்கு 15 % ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) செயற்றிட்டத்தின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) மேலே கணிப்பிடப்பட்ட NPV இன் அடிப்படையில், மேற்படி செயற்றிட்டத்தின் சாத்தியத் தன்மையை (viability) **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட PRC கம்பனியானது பொருள் X** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. பொருள் பூர்த்தியடையும் வரை, ஒரு செயன்முறையிலிருந்து மற்றைய செயன்முறைக்கு மாற்றப் படுகின்ற தொடர்ச்சியான உற்பத்திச் செயன்முறையின் மூலம் பொருள் உற்பத்தி நடைபெறுகிறது.

**செயன்முறை I** உடன் தொடர்புடைய 2020 டிசெம்பர் மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| நேர் பொருள் (10,400 கிலோகிராம்) | ரூபா 1,310,920 |
| நேர் கூலி | ரூபா 742,560 |
| மாறும் மேந்தலைகள் | ரூபா 283,960 |
| **செயன்முறை II** இற்கு மாற்றப்பட்ட வெளியீடு | 7,620 கிலோகிராம் |
| சாதரண இழப்பு | நேர் பொருள் உள்ளீட்டின் மீது 5% ஆக இருப்பதுடன் இதனை கிலோகிராம் ஒன்று ரூபா 70/- வீதம் விற்பனை செய்ய முடியும். |

மாத இறுதியில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் இறுதிப் புத்துருவாகும் வேலைகளில் 1,800 கிலோகிராம் காணப்பட்டது :

| | | |
|---|---|---|
| நேர் பொருள் | : | 100 % |
| நேர் கூலி | : | 80 % |
| மாறும் மேந்தலை | : | 60 % |

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் (Statement of Equivalent Units and Cost) **செயன்முறை I** கணக்கையும் **தயாரிக்குக.** (13 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட NEX கம்பனி** ஒரு புதிய சஞ்சிகையை அதன் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவது பற்றி தற்போது மதிப்பீடு செய்கிறது. இது ஒரு சந்தா அடிப்படையிலான அரையாண்டுச் சஞ்சிகையாகும். கம்பனியினால் சஞ்சிகை தொடங்கப்படுவதற்கான நிகழ்தகவு 80% ஆக இருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. சஞ்சிகை தொடங்கப்பட்டால், அதற்கான கேள்வி உயர்வாகவோ, நடுத்தரமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும் என்பதுடன் 1 மில்லியன் பிரதிகளுக்கு மேல் அச்சிடப்பட்டால் மாறும் உற்பத்திக் கிரயங்கள் பிரதி ஒன்றிற்கு ரூபா 195/- ஆக இருக்கின்ற அதே வேளை அதற்குக் குறைந்த அளவில் அச்சிடப்பட்டால் அது பிரதி ஒன்றிற்கு ரூபா 240/- ஆக இருக்கும். பிரதி ஒன்றின் விற்பனை விலை ரூபா 400/- ஆகும்.

ஒவ்வொரு கேள்வி மட்டத்திற்குமான விற்பனை அளவும் (கணியம்) நிகழ்தகவும் கீழ்வருமாறு :

| கேள்வி | விற்பனை அளவு | நிகழ்தகவு |
|---|---|---|
| உயர்ந்த | 1,200 | 0.3 |
| நடுத்தர | 800 | 0.4 |
| குறைந்த | 400 | 0.3 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

தீர்மானத்தை மதிப்பீடு செய்வதற்காக, சான்றளிக்கும் கணிப்பீடுகளுடன், தீர்மான மரம் (decision tree) ஒன்றை **வரைக.** (07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |